உ

கடவுள் துணை.

# மழவைச்

# சிங்காரசதகம்.

23511
(4767)

இவை
மழவை
மகாலிங்கையரால்
செய்யப்பட்டது.

சிதம்பரம்.
அம்பலவாண வுபாத்தியாயரவர்களாற்
பார்வையிடப்பட்டு.

வாணீவிலாஸ அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டன.

1898.

இதன் விலை அணா—[illegible]

உ

கடவுள் துணை

# சுவைக்கொத்து.

## சூஸ்த்திரம்.

கற்பகக்களிற்றின் கழெருழமுன்னிய - தற்ப
மூந் தடையின்றருள்செயமுடிமே.

### சிங்காரநாயகர் நால்வர்.

ஓர்மடவார்க்கே யுற்றவயத்தினன், அனுகூல
னென்ன வறைந்தனர்புலவர் (௧)

பலமாதருக்கும் பொதுவினிற்போன், தக்கி
ணனென்னச் சாற்றப்படுமே. (௨)

உரியளானே யுணருமின்றாச், செயகையன் ச
டனெனச் செப்பப்படுவன் (௩)

விளக்கமாகிய வழுவினனாகி, வெருவாதிருப்
போன்றிருட்டனென்ப (௪)

—:o·—

### சிங்காரநாயகிகள் என்மர்

அன்பன்கொண்டாட்டடைந்தபாவை, வய
ப்படுபதியினளளென்னவகுப்பர் (௧)

தானும்படுக்கைத் தலனுமணியிற், கைசெய்
துற்ற காமாதுரையாய்க், கிழவனெதிர்வு கிட்டு
றநோக்கு, மேந்திழைவாசகசச்சிகையென்ப ()

தணப்பினெழுந்த தகையார் வேட்கையள் விர
கோத்கண்டிதை யென்னலாகும் (௩)

காமமேற்கொளீஇக் கணவன்வஞ்சனையின், மூ
ழ்கியமெல்லியல் விப்பிரலத்தை (௪)

அயன்பகட் புணர்ந்தகுறி கண்டழுங்கி, வெ
குளியுற்றாள் கண்டிதையாகும் (௫)
அடைந்திடுகணவனை யனன்றுபோக்கிக், கல
ங்கியேபேதை கலகாந்தரிதை (௬)
அன்பனயலுடையவுருக்குறும், பாவைபிரிந்
தபதியினளாகும். (௭)
வீழ்வுகொண்டோர் விடலைபாற்றனே, ஏகு
மவையபிசாரிகையாம் (௮)

---

பருவநாயகிகள் மூவர்.

அரும்பியயௌவன முடையளாகி, வேளினை
நாணில்வென்றவள்முத்தை. (௧)
பருவநிறைந்து வெள்குதலில்லாக், காரிகை
தான்பிரகற்பையென்ப (௨)
இடைப்படுபருவமு நாணுமேந்திய, மங்கை
யை மத்தியையென்னவகுத்தனர் (௩)

இந்தப் பிரபந்தத்தில் சிலவிடங்களில் செய
வெனெச்சத்தைச் செய்தெனெச்சமாகத் திரித்
தும் குற்றமற்ற தேசியமொழிகளையுங் கிராமிய
மொழிகளையும் பிரயோகித்துமிருக்கின்றோம்
யாவருமுணர்தற்பொருட்டு.

இந்தநாயகநாயகிகளுக்கு ரசத்தைப்பற்றி
ய பல்பாவங்களும் சேஷ்டைகளும் அவஸ்தைக
ளும் லீலைகளும் சம்பவிக்கின்றன அவையெல்
லாம் விஸ்தாரப்படுமென்று கூறப்படவில்லை.

சுவைக்கொத்து
முற்றிற்று.

உ

கணபதி துணை.

# மழவைச் சிங்காரசதகம்.

தலைவியைத் தலைவன்புகழ்தல்.

நாயகி - சுவாதீனபதிகை - மத்திமை

நாயகன் - அநுகூலன்.

பொன்னுலகின் மேவமுத மொருபொறிக்கே
பயனளிக்கும் பொதுவாய்யார்க்குந்
துன்னுகின்றவுறுப்புமில்லைமறுமையின் மாத்
திரங்கிடைக்குந் தூயமற்றோர்
இன்னமுதமைம்பொறிக்குஞ் சுவையிந்துசிற
ப்பாகி யெனக்கேயெண்ணின்
மண்ணுருவம்வாய்ந்துநன்று யிம்மையிலே கி
டைத்ததுகாண் மழவைமானே (க)

இதுவும்-முன்பாட்டுபோல்

சம்போக சிருங்காரம்

சுவையெல்லாமினிப்பாகி யினிப்பெல்லாமோ
ரிடத்தே தொக்கபோது
நவையில்லா வுறுப்பெல்லாம் நாவாகியதனுரு
கிநயந்தாலெர்க்குந்
துவையலாயெழுந்த வடிவேலன்ன கண்ணுளோ
ச் சுகிக்குங்கால்மற்
றவையெலாங்குணமிலவென் றிதழமுதப்பரு
குமவியனுக்குத்தானே. (உ)

பாவியவிப்பிரலம்பசிங்காரம்-நாயகி
மத்திமை - பிரியும்பதியினள் - நாயகன்
அநுகூலன் - அச்ரு என்னும் சாத்துவிகம்
சிந்தையென்னும் வியசாரிபாவம்.

இழைவைத்த மெல்லிடையாள் காதலனார் நா
வெடுத்து மெழாமைகண்டு
பிழைவைத்த பிரிவென்று தேகவசமற்றே நா
ப்பெராதாகக்
குழைவைத்தநெடுங்கண்ணாற் றழுவினாள்முடி
விதனைக்குறித்தாளாறு
மழைவைத்தாரையினாற் பார்ப்பதற்குந் த
டையுற்றாள்மழைவைமானே. (௩)

இதுவிப்பிரலம்பசிங்காரம் - நாயகன்
சடன் - நாயகிகண்டிதை - பிரகல்பையும்

கரும்பெனுஞ்சிலையை வளைத்துமென்மலராங்
கணைவிடுகாமனார்க்கஞ்சி
குரும்பை மென்முலையாள் தனைச்சரணாகக்
கொண்டிடுபாவியேற்கந்த
இரும்பினேர்நெஞ்சி புருவவில்வளைத்தே யே
ற்றுகண்ணம்பினை விடுத்தாள்
பெரும்பகை கொண்டாள் பாவமென்றெண்
ணாள்பேசுவாய் மழைவைநன்மானே. (௪)

நாயகன் - சடன்-நாயகிகண்டிதை - பிரகல்பை
அமர்ஷமென்னும் வியசாரிபாவம்

என்னத்துக் கவன்வார்த்தை யெடுக்கின்றாய்
வேறொருபேச்சிருந்தாற் சொல்லு
சொன்னத்துக் கிரண்டிசெய்யே னொருநாளு
மவனுடைய சேர்வேண்டாந்

பின்னத்துக் கிடமாக்கி யெனைத்தெருவா ரீ
கைக்களைத்தசீமானந்த
அன்னத்துக்கேயுரிய பணிசெய்க மழைவைந
கராரந்தமானே. (௫)

பாங்கி தலைவியை-இயைவித்தல்-நாயகன்
சடன்-நாயகிபிரகல்பை விப்பிர
லப்தை-அமர்ஷம்-பாவம்

இன்னமொருதரப்பாரு மறுபடியுந்துர்மார்க்
க மிசைந்தானாகில்
அன்னமேயவன்முகத்தில் விழிக்காதே யிது
வன்றி யவனும்வாரான்
என்னசெய்வே னொருமாச மிரவுபகலாய்நட
ந்தானென்றன் வீட்டுக்
குன்னிடத்திற்சொல்லி விட்டேனுன திஷ்ட
மழைவைநகர்க் குரியமானே. (௬)

தலைவி தலைவன்செய்கையைப் பாங்கிக்குரை
த்தல் - நாயகன் திருஷ்டன் - நாயகி
விரகோற்கண்டிதைபாவம்அசூயை

இழைந்திருவருடனு மொன்றாக் கலந்தாரா
மொருபோது மினியென்வீட்டில்
நுழைந்திடவே யில்லையென ஆணையிட்டுக்கொ
ண்டாராம் நொடிப்பாய்ப்பேசிக்
குழைந்தவளைத் தலையில்வைத்துக் கூத்தாடு
கின்றாராங் கோடிதெண்டந்
தழைத்தபய பத்தியொடு செய்வாரா மழை
வைநகர்த் தலைவாமானே

நாயகிவிரஹோத்கண்டிதை - பிரகல்பையும்
விப்பிரலம்பசிங்காரம் - கிலானிமம் - தைநிய
முதலாகிய சஞ்சாரிபாவம் சிலவுண்டு

தாயாதியோபண்டைச் சத்துருவோ மன்மத
வேள் சரங்கள்வாரி
ஓயாமற் பொழிகின்ற னுடம்பி லொருசத்து
மில்லையுண்மையாக
ாயாமலிருப்பேனோ தெய்வமே மழவை
நகர் மன்னனசை
தேயாதுசெத்தாலு மறுமையிலாயினு மவனை
ச்சேர்த்திடாயே. (அ)

சிங்காரம் - விப்பிரலம்பம் - நாயகன் - சடன்
நாயகி-கண்டிதைபிரகல்பையும் பாங்கி
தலைவிக்குரைத்தல் அமர்ஷம்பாவம்

என்றுமொருதன்மையராயிருப்பரோர்மாதரி
டர்களிந்தக்காலம்
அன்றிருந்தகுணம்வருமோ விந்தநாண்மழ
வைநகரரசுக்கோங்கும்
குன்றுபோற்பணைத்தெழுந்த கொங்கையாய்
பயித்தியம்நீ கொண்டாய்சும்மா
தின்றுவிடுகோபத்தைப் பிரந்திலேனென்றெ
ண்ணித்தேறுவாயே. (க)

தலைவி - தோழியொடுகிளத்தல்
தலைவன் திருஷ்டன்.
தலைவிபிரகல்பை கண்டிதையும் அசூயை
முதலிய சிலபாவங்களுண்டு

படுக்காளிவர் தா[illegible] றெண்
ணுதேபாவா[illegible]

MAHAMAHOPADHYAYA

முடுக்காகவெரிநெருப்பை நெய்விட்டுத்திருத்தி
கொளமூட்டல்போல
அடுக்கா வப்பெண்பேயை வர்ணித்தான்விடியு
மட்டுமவள்போலாசை
கொடுக்காத பேர்க்கென்னவா யென்றான்ம
ழவையின்னே குன்றினேனே (௰)

பாங்கி தலைவியோடுகிளத்தல் - நாயகன்
திருஷ்டன் - நாயகிகலஹாந்தரிதை
பிரகல்பையும் விஷாத்தப்பாவம்

மன்றாளுமழவையர்கோ னிரவில்வந்துவர
ப்புதைத்தென்கால் வருடிமானேயாசைக், கன்
றானபெண்ணரசே யேதோபொல்லாக்கர்மவ
சதாலடியேனுன்னை நீங்கி, எண்ணாமற்செய்த பி
ழைபொறுக்க வேண்டுமென்று குழைக்கடித்
தொன்றுமேற்றிடாமற், புண்ணேனெஞ்சிற்
புண்ணுறவுபோதும் போவென்றேன் மனங்கசந்
துபோனான்மாதே. (௰௧)

தலைவிபாங்கிக்குறைத்தல் - தலைவன்
சடன் - தலைவி - பிரகல்பை - கண்டிதை
ஆமர்ஷம்பாவம்

மங்கையேயவனிடத்திற்சென்று வரயில்வந்த
தெல்லாங் கொட்டிவிடு மகிழ்ந்தே யென்றன்,
செங்கைபிடித்தவனென்று நினைக்கவேண்டாந்தி
ரும்பி யொருவேளை யவன்சினேகஞ்செய்வான்,
நங்கையின்பாலெனு நினைப்புமறக்கவேண்டும்நா
னிலத்தோரறிய வவன்நடத்தையோடு, தங்கை
மார்கொடுமைகளுந் தூற்றவேண்டுந் தாட்சினி
யமேன்மழவைத்தலைவர்மீதே (௰௨

தாய்கூற்று நாயகிமத்திமை-விர
ஹோற்கண்டிதை - தைனியமுதலிய
பாவங்கள்சிலவுண்டு

கரிந்துவிழுமலர்ச்சயனங் காமக்காய்ச்சல்கண்டுவெகுதொந்தரவாய்க் காயமெல்லாம், பொரிந்துவிடு கொப்புளங் களனந்தகோடி புண்ணாகிப் புரையோடப் பொருக்காதோலே, வரிந்துவிடக் கிழித்தெறிந்து பேச்சொன்றேனும்வழங்காமற் பற்கடித்து வந்தோர்மீதி, லெறிந்துவிழுவென்ன பிழைசெய்தாளென் பெண்ணிவ்வாரோ மழை [illegible]யர்கோனெ ன்னர்தானே. (௰௩)

தலைவி பாங்கியொடுகிளத்தல் - நாயகன் சடன்-நாயகிவிரகோற்கண்டிதை-அருமை விஷாதம்-ஔற்சுக்யம்-பாவம்

கொட்டியேயளந்தாலுங் குறுணிதூணி கொள்கைபெறக்காணாது கொடியவார்த்தை, யட்டியில்லா துரைத்தவனைப்புகழ்ந்திட்டாலு, மவனிருப்புவன்னெஞ்ச மிளகமாட்டா, தெட்டிமரம் பழுத்திட்ட பயன்போலானு னென்மட்டிவினி மரந்து மென்னைப்பாரான், கட்டியதேன் சுவை யானன் மழவையாளிகன்வளையால்வசமாக்குங் கள்ளிமார்க்கே (௰௪)

நாயகிவிரகோற்கண்டிதை அல்லது
புரோஷித பர்த்ருகை மரணப்பாவம்

பணிந்தெளிய முகங்காட்டி யிரந்துமொரு பயனுண்டோபாவாய்சாகத்
துணிந்தவர்க்குக்கடல் முழங்கரலள வாழமலரம்புந் துளைத்துப்பார்க்க

தணிந்துநிலாதெரி மதியுந்தன்னென்ன முடித்திடுகசார்தேமாவில்
அணிந்தசிறுகுபில் தொன்னடை கிழித்திடுக
எனக்கொன்றேயாவிமானே (யரு)

தலைவிபாங்கியைத் தூதனுப்பல் - நாயகி
விரகோற்கண்டிதை நாயகன் அநுகூலன்
அல்லது-தக்ஷிணன் ஔத்ஸுக்கியமென்றபாவம்.

வம்பிட்ட வார்த்தைகளால் வாய்ப்பேச்சைப்
பழிக்கின்றீர் மங்கைமீர்வேள்
அம்பிட்டுத் துளைத்தபுண்கள் நாவிரண்டோ
ஒருகோடி யாற்றுவேனோ
கும்பிட்டே னுங்களைநான் தோஷமில்லை ம
ழவையர்கோன்கொலுவிற்சென்று
கொம்பிட்ட மெல்லிடையாள் மயல்கொண்
டாளெனும்வார்த்தைகூறுவீரோ. (யசு)

தாய்கூற்று-நாயகன்-சடன்-நாயகி
விரகோற்கண்டிதை.

முளைத்துமூன்றிலைவிடுமுன்களைபுரண்டபோ
கத்தான் மொத்துண்டையோ.
வளைத்துவிடு மவன்கணைக ளுடலமெல்லரஞ்
சல்லடைக்கண்வடிவமாக
உளைத்தணை பிற்கிடந்தகிடையாகிவிட்டாளெ
ன்குழந்தையோ கோபாவம்
விளைத்துவிட்டு வேடிக்கைபார்க்கின்றான்
மழவைநகர்மேவுவோனே. (யஎ)

நாயகி புரோஷிதபர்த்ருகை - மன்மத
தூஷணம் - அர்ஷமென்னும்பாவம்

அல்லானகயமேறி விற்பிடித்துக்கடன்மு
ரசமார்ப்பவந்த
பொல்லாதமதப்பயலே பாருன்றனல்லாள
மட்டும்பொறுக்குநின்று
மல்லாடுமழைவையர்கோன் மாலேதனை
யனுப்பிவைத்தான் வாய்ந்துன்காசு
செல்லாது வட்டத்துக்கெய்துவனோ
வினிவினைவிற்செல்லுவாயே. (௰அ)

தலைவி பாங்கியைத்தூதனுப்பல் - நாயகி
விரகோத்கண்டிதை - நாயகன் சடன்

அவன்பேச்சை நம்பாதே ஆச்சென்பான்
பிடிக்குமசற்காறுபாதகம்
இவிடமகத்தியம்வருவேனென்றுனக்குப்
பொய்யாணையிட்டுச்சும்மா
அவள்வீட்டில் மூன்றுநாளா யிருந்தான்பின்
பெங்கேயடைந்திட்டானோ
அவள்வீட்டில் மூன்றுநாளாயிருந்தான் பின்
பெங்கே யடைந்திட்டானோ
பவளவிதழ்மழைவைபின்னே மறுபடியு
மொருதரம்போய் பார்த்திடாயே (௰௯)

நாயகன் - தலைவியின்பொருட்டுத்
துயருறுதல் நாயகன் - அனுகூலன்
நாயகி சுவாதீனபதிகை.

எனைத்தாவிக்கலந்த தனுக்கென்னபய
னனுபவித்தாளென் மொட்டி

தனைத்தானே நொந்துகொண்டாளென்
றெனும்புருஷசுகந்தான் கண்டாளோ
இனத்தார்க்கும் வெளியிடா ளிச்செய்தி
மகிழ்ந்தவளையின்புருதே
தனத்தாலே மயக்கியர்க்கேகாலமெல்லாங் க
ழித்திடற்குத் தலைப்பட்டேனே. (உ௰)

சாயிரங்கல் நாயகிபுரோஷித பாத்துருகை
நாயகன் - அநுகூலன் விப்பிரலம்பசிங்காரம்
சிந்தை விஷாதமென்னும் பாவங்கள்.

ஏகுணமும்பார்த்தாள் குறியையுங்கேட்டாள்
சாதகபயனு மாய்ந்திட்டாள்
நகுபெருந் தெய்வசந்நிதிமுன்னே சாற்றுறு
பூவுமவைத்தெடுத்தாள்
மகிழுநர்வரு வாரென் றுளங்களித்தார் ம
ழவையாய் சொன்னவித்தனையு
மகள்பொருட்டா லேலகலியுகத்தாலோ மாய
மாய்பொய்த்ததுவேனே. (உக)

தலைவிவருந்தல் நாயகிவிரகோத்கண்டிதை
தலைவன் தக்ஷிணன்

தாயிடக்குமரார்கள் தம்மிடக்குந்தனித்தனி
யே சகிமார்சொல்லும்
வாயிடக்கும் பொறுத்துமுடி போவதில்லை
யென்னசெய்வேன் மழவையானே
நீயிடக்குச்செய்துவரு திருந்தபடியாலன்றோ
நேர்ந்தமாரப்
பேயிடக்குமழல்சொரியும் பிறையிடக்குங் க
டலிடக்கும்வேசொணுதே (உஉ)

தலைவி பாங்கியொடுகிளத்தல் - நாயகி
விப்பிரலப்தை - நாயகன்சடன் - அசூயை
யென்னும் பாவம்.

மதுமேவு குழலணங்கே யாச்சரிய மென்ன
சொல்வேன் மழைவையான்போ
யதுவேலையாயிருக்கக் கேள்வியுற்றேனே னெ
ன்றுலவல்மேல்வைத்த
புதுமோகமொன்றிட்ட மருந்தொன்று போ
தனையின் புணர்ச்சியொன்று
மெதுவாய்நானவனுக்குத் தருந்தபடி நடந்த
தொன்று விளைத்தலாமே. (உ௩)

தலைவி அம்பெடுத்தோரைச் சினத்தல்

பேய்களைகணவனுக்கும் பெண்சாதிதனக்கு
முள்ளே பேச்சுநூறு
மாபிரமுநடந்திருக்கு மதைக்குறித்துச்சொ
ல நீங்களாரில்லையோ
நாயகனைநாளைக்கு வந்திடுவர் மழைவையி
னில் நகைப்பேனன்றிப்
போயொரு சமாதானஞ் செய்வதற்கும் வழி
மையில்லை புலம்புவீரோ. (உ௪)

தலைவன் தலைவிக்குச் சமாதானஞ்சொல்லல்

நாயகி சுவாதீனபதிகை - நாயகன் தக்ஷிணன்
அல்லது சடன்.

கண்ணேகேலேகண்டாயோ பிறர்சொல்லை நம்பா
தே காரியமொன்றை
யெண்ணமற் சொல்லலாமோ தீர்க்கவிசாரித்த்
திநீ யென்மேற்சொன்ன

பெண்ணையாகிலுந்தான் கொண்டுவந்து மூ
தலியிப்பெரும் பார்மீதில்
உண்ணுதநஞ்சு சொல்வதுண்டோ நன்மழை
வை நகர்க்குரியமானே. (௨௫)

தலைவி பாங்கியொடுகிளத்தல் - நாயகி
விப்பிரலப்தை - நாயகன் சடன்-விப்பிரலம்ப
சிங்காரம் - தைனிய மென்னும் பாவந்தொனி.

பிரியாமலிருக்கின்ற ரெப்பொழுதுஞ்சரசமா
ய்ப் பேசுகின்றார்.
பரியாசமாயொரு சண்டையுங்கூட நடந்தி
ல்லை பாவைநன்றாய்
உரியானை யனுபவிக்கக் கொடுத்துவைத்தா
ளெனமிகவுமோமபற்பட்டுத்
தரியாதோர் கண்குளிரப் பார்த்திடலாமெ
ன மழைவைசார்ந்தமானே. (௨௬)

பரத்தைசெய்கையைப் பாங்கியர்
ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளல்.
நாயகி அபிசாரிகை.

மோசம்கிதம் நடக்கிறதை மழைவையர்
கோன்கண்டறியான் முந்தாநாளில்
வாசமுறுமலரணையி லிருக்கையிலே வே
றொருவன் வரவுபார்த்துக்
கூசிவிளையாடுதல்போ லவன்கண்ணைப்
பொத்தவவன் கூடத்தோரம்
ஏசறக்கட்டிய வறைக்குட்புகுந்திட்டான்
கையையெடுத்தேய்த்திட்டானே. (௨௭)

தலைவிகூற்று - தலைவிவிப்பிரலப்தை
தலைவன் திருஷ்டன்-விஷாதமென்னும் பாவம்.

பொன்காய்த்த மரம்போலச் செய்துவிட்டா
ன் பர்த்தைதன்னைப் பொறுமையாலே
பொன்காய்த்த முருங்கையுருவிய கோல்போ
லெனைச்செய்தான்
கூட்டுமில்லா நன்காச்சுதெனத் தெருவார்
நகைக்கவுடம்பெடுத்து மனநலிந்தபாவி
யென்காய்ச்சல்தீர்ந்திடுமோ தலையோடு போ
மழைவையினியமானே. (௨௮)

நாயகி விரகோற்கண்டிதை - நாயகன்
திருஷ்டன் - விஷாதமென்னும் பாவம்.

தோழிதனையனுபவித்தேன் மழைவை
யர்கோனிடத்திலவன்றுணிந்துநாலு
நாழிகைமேல் நீசொன்னநாயகியாரொன்
றுனுன்னங்கைஎன்றாள்
பாழுறுபொன்சொப்பனம்நீ கண்டாயோ
மதிமயக்கோபமைதானோ
வாழிமின்னேயிடந்தப்பி லந்தனையோ
போவென்று வகுர்த்தான்மானே. (௨௯)

நாயகன் சடன்-அல்லது-திருஷ்டன்
நாயகிபிரகல்பை.

*சண்டைநமக்கந்தரங்கத் திருக்கட்டு மழை
வையினிற் சரசமாக
அண்டையயலாரறிய நட்புமிருந்தவர்
போலவபிநயித்துக்
கொண்டிருப்போம் வெளிபிட்டால் தூறுண்
டாமிருவருக்குங் குணத்தைச்சொன்னேன்

பண்டையன்பாயிருந்ததனை மறந்துவிடு
மழைவையெனும் பதியுள்ளானே. (௫௰)

பாங்கி தலைவிக்குச் சமாதானஞ் சொல்லல்
நாயகி விரகோற்கண்டிதை - நாயகன் சடன்
அல்லது திருஷ்டன் - விப்பிரலம்ப சிங்காரம்
சிந்தையென்னும் பாவம்.

எண்ணமிட்டுக்கொண்டிருப்ப தெதற்காக
வுன்னுடைய விறைவனை
வண்ணமுலைக்காரிகையார் கைவிட்டார்
வெளுத்தவர் வாய்கொண்டாட்டம்.
கண்மூடிக்கொண்டிருநீ பத்துநாள்
வரைக்குமந்த காலத்துள்ளே
புண்ணியஞ்சேர் மழைவைமின்னே தாமே
வந்துன்னிடத்திற் பொருந்துவாரே. (௫௧)

நாயகிபிரகல்பை-நாயகன்
விடன் - சம்போகசிங்காரம்.

காளையொன்றுபிறர் புலத்திலெந்நாளுமேய்ந்
திடவேகண்டேன் சொந்த
ஆளறிந்தால் போசம்வருமெனவுரைத்தே
னம்மிறைவரதற்கந்த
வேளையினில் மேய்ப்பிடுதற்குரியோர்களிலரா
யின்மேலதென்செய்யும்
பாளைவிரிமணங்கமழு மழைவைமின்னே யெ
னக்குறிப்பிற் பகர்ந்திட்டானே. (௫௨)

தலைவிசொல்-நாயகி விரகோற்கண்டிதை
நாயகன் அநுகூலன் அல்லது தக்ஷிணன்
விஷாதம்-தைனியம்-என்னும்பாவங்கள்.

ஒன்றுயிரண்டா பட்டகுறை யொருகோடியி
ன்மேற் பதின்மடங்காம்

இன்றுநேற்று வெகுநாளாயிதுவே வண்ணமா
யிருந்தாற்
குன்றுது யிரும்பிழைப்பேனே கொடுங்கழை
யானென் னுயிரைத்
தின்றலதன்பின் மழைவையர்கோன் சித்த
மிரங்கியருள்வானே. (௲௩)

பாங்கதலைவிக்குரைத்தல்-நாயகன்சடன்
நாயகி விரகோற்கண்டிதை - விப்பிரலம்ப
சிங்காரம் வியாதிதைனியமுதலியசிலபாவங்கள்
இருக்கின்றன.

சுமையாவிறக்கி விட்டுன்னைச் சுகத்தில்வைக்
கத்திரவியத்தால்
இமையாமயிலே நிற்பதற்கு மெண்ண முண்
டோ வுன்பிணியை
அமையாதிதற்கு மருந்தொன்று மையோ ம
ழைவைப்பழிகாரன்
நமையாதரிக்கவந்துவிட்டால் நமனூர்தமக்கு
ம் பயமில்லையே. (௲௪)

விரகத்தாற் புலம்பல் நாயகிவிரகோற்கண்டிதை
நாயகன்-சடன்-அல்லது-தக்ஷிணன்
விப்பிரலம்ப சிங்காரம் ஜாக்ராதி
சில அவஸ்தைகளும் - கிலாணிமமுதலிய
சில அவஸ்தைகளும் வரும்.

கொள்ளிமதி யெழுந்தனலாற் கொளுத்திய
தும்போதாமற் கொடியமாரன்
வெள்ளரியின் கனியென்ன வுடலமெல்லாம் வி
ரிந்திட்டே விரைத்தான்வாளி

தள்ளிவிடவகையுண்டோ அன்றயனும்படிபோ
வி தலைமேற்போட்ட
புள்ளியினையென் றருகி மழைவையர்கோன்
தனைநினைந்து புலம்பினளே. (௩௫)

தாய்வருந்தல் - நாயகிவிரகோற்கண்டிதை
நாயகன்சடன் - மூர்ச்சைமென்னு மவஸ்தை
மரணமென்னும் பாவம்.

காய்ச்சுபால்படிபுகட்டத் துளியளவு முள்ளி
றங்கக் காணேமையோ
மூச்சுமினிநின்று விடுமினைதவிடத்தான் மோ
சமுண்டோ முறையோவூரா
ரோச்சுமினியென்செய்யு மென்னருமைமகளா
சை யிந்நாளோடே
போச்சுநம்மே லிவ்வளவு கருணைவைத்தான்
மழைவைநகர்ப புண்ணியவானே. (௩௬)

நாயகி விரகோற்கண்டிதை நாயகன்சடன்
கிலானியென்னும் பாவம்.

தத்திப்பாவையைரொருவர்க்கொருவர் முறை
யிட்டழுதகண்ணீர்வெள்ளந்
தத்திப்பாயவணைதனையுங் கொண்டோட வெவ்
வளவுஞ் சகியாளன்னம்
அத்திப்பாயலைதனிலே மதியெழுந்தா லென்
னசெய்வாளையோ ஆவி
தித்திப்பா மகள்தனக்கு மழைவையர்கோன்
வாராமை தெரிந்திலாளே. (௩௭)

தலைவிசொல்ல நாயகி விரகோற்கண்டிதை
நாயகன் தக்ஷிணன் - அல்லது - சடன்சிந்தை
தைனியமென்னும் பாவங்கள்.

இரக்கமுண்டோ பெண்களொடுபிறந்திலரோ
பாவமுஞ்சற்றென்றுரோ வவ்

வரக்கியமொன் காதலனைக் காணுதற் காயினு
மொருகாலனுப்புவாரோ
புரக்கவெனைப்பல்ரறியக் கைப்பிடித்தோ னிர
ங்காமற்போவானுகிற்
பரக்குழலை மழைவைமின்னே யவர்களைநொ
ந்தாவதென்ன பாரின்மீதே. (௯௮)

நாயகி புரோஷிதபர்த்துருகை-நாயகன்
அனுகூலன் கிலானியென்னும்பாவம்.

மழைக்காலம் வருவனென்னப் பிரிந்தகன்ற
பாதகனுர் வரவேயில்லை
பிழைக்காதுதேறையொன்று பாய்புகளாயிர
நடுவிற்பிறைபோராழி
குழைக்காததளிரருந்தும் குயில்புள்ளாங்குழ
லிரவுகுளிர்ச்சிவாடை
கழைக்காமனிப்பகைக்கீழ் மழைவைமின்னே
யாறெருத்தி கலங்குவேனே. (௯௯)

நாயகிகண்டிதை நாயகன் சடன்-உக்கிரதை
யென்னும் பாவம்.

இலைமறைவு காய்மறைவா யில்லாமல் வெளிப்
பட்டானெங்குமந்த
விலைமகளையழைக்காமற் போவதில்லை பாங்கி
யொருவிசை பார்த்தாளாம்
தலைமறைவாய்த் தாறெளித்துக் கொண்டா
னும் வெட்கமென்ன சபைக்குவந்தும்
குலையெரியுமென்பாவ மழைவையனை விடுமெ
ன்ரீகுறித்திடாதே. (௱)

நாயகன் திருஷ்டன் - நாயகிசுவை - பிரகல்பை ஸ்மிருதியென்னும் பாவம்.

ஆணன்றில் தனக்குரிய வருமையாம் பேடை தனையணைந்திடாமற்
காணுகின்ற வெவைகளிலும் வாய்வைக்குங் காகமொன்றைக் கலந்துவாழப
பூணிலங்குமுலையனமே கனவுகண்டேன் சில நாள்முன் பூர்ணமாகக்
காணவூடுபவித்ததம்மா வவர்தனையே மழைவையர்கோன் கைக்கொண்டானே. (சச)

நாயகன் திருஷ்டன்-நாயகிதீராதீரை-தைனியம் ஆவேசும் - இவைகளின் சபளதை.

அவனுரைத்த சுடுமொழியி லொவ்வொன்று மென்மனதி லம்பாய்ப்பாய்ந்து
துவளவுடல் சுறீரென்று சுடுகின்ற தென்ன செய்வேன் சொல்லொணாது
சிவனொருவனிருக்கின்றா னெவற்றினுக்குமெ னநானே தேற்றிக்கொண்டு
புவனமகிழ்மழைவைமின்னே யிருந்திடினு மகங்கொதித்தல்போகாதே. (சஉ)

மரணமென்னும் பாவத்தின் உதயம்.

காய்ப்புமென்றிடுமிவற்றில்முந்தியசொலவன் வாயிற்காணுமாற்
பாய்பெருந்தீக்கு திக்கித்திடுவேன் மலையேறிக்கீழ்விழுவேன் பாருங்கல்லை
ஆய்மருங்கிற்கட்டிமிக வாழமுள்ள தண்ணீரி லமிழ்வேன்றீ

போய்விடுதற்கெத்தனையோ வழியுண்டுமழை
வைநகர்பொருந்துமானே. (௪௩)

பாங்கிதலைவிக்குச்சொல்லல் - நாயகி
கலுகாந்தரிதை.

பனிமொழியே குறளினுக்கு மாறுகப்புறத்து
நிந்தை பகர்ந்திட்டாலும்
அனியாயமன்றெதிரோ நிந்தித்துமுகங்கொடு
க்கா தடித்தாய்போனன்
இனிவருவதில்லையொரு காலத்து மழைவைய
ர்சோனெனைத்துதாக்கத்
கனிகின்றாய்கண்ணிழந்தோசூரியர்க்குவணக
கமதுகாட்டுவாயே. (௪௪)

நாயகன்-திருஷ்டன்-நாயகிமத்திமை
அதினை-தனியமென்னும்பாவம்.

வாய்மூடித்தலையைவெட்டும் வகையறிந்தான்
மழைவையர்கோன் வந்தபோதே
காய்கின்றனேதுவின்றி யெவ்வளவோ பயந்
தெளியேன்காரியங்கள்
ஆய்வுரச்செய்திட்டானு முக்குளிரான் பிள
விலைகொண்டவன்பான்பெள்ளப்
போய்நின்றுநீட்டிறினும் வைத்துவிட்டு நட்
வென்பான்பொன்போல்பானே. (௪௫)

தாய்கூற்று - நாயகன்சடன் - நாயகி
விப்பிரலப்தை-கார்சியமென்னு
மவத்தை - மோகமென்னும் பாவம்

ஆசையெனுநெருப்பை மனகத்தில் மூட்டிய
வியாமல்வளர்த்துவிட்டாயதனால்நான்கு

மாசமூராளவுடம்பு துரும்பதாக வற்றியே பழையவுருமாறித்தேய்ந்தா
மோசமினி யென்றுசொல்லும் நிலைக்குவந்தாள்மூச்சுமில்லைப்பேச்சுமில்லை முடிவுதானோ
ஏசுபெறுகளைகூட முகத்திலிட்ட தென்னசெய்வேன் மழைவைநகர்க்கினியகோவே. (சசு)

நாயகி விரகோற்கண்டிதை அவுற்சுக்கிய
மென்னும் பாவம்.

எப்படியோ அவனெஞ்சமென்றனக்கோ வதிகமோகமியம்பொணாது
தப்பொன்றுஞ் செய்ததில்லை சாமியாரிருக்கின்றார் சாட்சியாக
இப்புவியிலொருதொழிலை நெஞ்சரிந்து செய்யாமலிருக்கவேண்டும்
செப்புமூலைமழைவைமின்னே யறியாதோர் பலவிதமாய்ச் செப்புவாரோ. (சஎ)

நாயகன்சடன் - நாயகிகண்டிதை - ஆவேகம்
உக்கிரதையெனும் பாவங்கள்.

பதறியெனைத் தொடவேண்டாம் பத்திரம்நீதூரநில்லாவியுன்பாற்
கதறியேவேண்டியதோர் காலமெல்லாங்கொடுமூறுக்கேகண்டாயங்கே
உதறியுனைவிட்டனரோ தங்கைமாரெம்முகங்கொண்டோடிவந்தாய்
சிதறுமலர்ப்பொழில்சூழு மழைவையுள்ளாய் பெண்வேறுதேடுவாயே. (சஅ)

தலைவிபாங்கியொடுகிளத்தல் - திருதி
யென்னும் பாவம்.

தத்தைதமொழிக் காரிகையா ரெவ்வளவுசொ
ன்னாலுந் தாழ்ச்சியாக
உத்தமனைமழைவயர்கோனதற் கொத்து
நடந்தாலுமொருகாலத்தும்
பத்தியவன்மீதினிலோரெள்ளளவுமாறுதுபா
ரோர்தம்மால்
மித்திரபேதகமுறினு மின்னல்வெட்டி மாறு
முன்னே விலகுந்தானே. (சகூ)

நாயகன்சடன்நாயகி பிரகல்மை
தைனியமென்னும் பாவம்.

அழுதழுதுகண்ணீரு மாறுகக்குரல்கம்பியனை
ங்கவேள்செய்
பழுதுகளை யெடுத்துரைத்துத்தமொழி யவர
வரைப்பலவாக்கிகெஞ்சித்
தொழுதனுப்பு வித்துமயர் மழைவைமன்னு
விரகத்தைத் துடைத்தாயோலை
யெழுதுவதிலென்னபய னேட்டிறுக்கேசேத
மெனவெண்ணினேனே. (ருய)

நாயகிபிரிந்தபதியினள் - மரணமென்னும்
பாவம்-பாவிவிப்பிரலம்ப சிங்காரம்.

இறப்பதற்கே சித்தமாயிருக்கின்றேன் வே
றொருபேச்சில்லையுன்னை
மறப்பதுவோகிடையாது மழைவையரசே யு
ன்பால்வந்துசேரப்
பறப்பதற்கோசிறகில்லை ரசகுளிகையில்லையெ
னைப்பிரிந்துதாக்

சிறப்பவங்கே சேர்ப்பதற்குத் தெய்வவசியமு
ல்லைநியங்குமேவனே. (௫௧)

திராதவழக்கிவர்க ளிருவருக்கு மென்னாளுஞ்
செப்பலாமோ
ஆராவதொருவகையாய்த் தீர்த்தாலுமவ்வள
வி லடங்குவாரோ
தாராருங்குழலணங்கே தங்களுக்குத் தாங்க
ளே தணியவேண்டும
நேராசுமழைவையுள்ளார் நம்மீதில் நிந்தனை
யைநிறுத்துவாரே. (௫௨)

நீதியற்றமானிட ரிவ்வூாரக்கொடியநீலி
வாழும
வீதியில் நாளொருதரம் போயிருந்திடலாமது
தானும் வெகுநாட்பேச்சுப்
பாதகியைக்கறுப்புவெளுப் பென்றறியேன் ச
ம்பந்தப்பட்டதாக
வேதையயறுகயிறுகட்டி விட்டார்கள் மழை
வையின்னே வெருண்டிட்டேனே. (௫௩)

பரிந்துமலய்சக்காற்றோடளவி விளையாடுதமி
ழ்பகர்ந்தோனுண்ட
விரிந்தமகராலயநீர்மீண்டதுவும் கரும்பாம்பு
விழுங்கத்திங்கள்
கரிந்துசீரணமாகிப் போகாமற்பிழைத்ததுவு
ங் கடவுள்கண்ணை
லெரிந்தமதனுய்ந்ததுவு மென்பாவமழைவை
நகர்க் கினியமானே. (௫௪)

காதலனோர்சொல்லுவதுகேட்டுரையோ நிசமோ
வக்க...

கோதகனுஞ்சவுந்தரிய முடையவளோ வென்னிலும் நற்சோதாய்கண்ணு
லாதரத்தினோடு நன்ருய்ப் பார்த்தாயோ மழைவையுள்ளாரும்பேயென்றுந்
தீதுறுதேவாங்கெனவுங் குரங்கெனவும் பலவிதமாய்ச்செப்பினுரோ. (௫௫)

பருக்குமுலைப் பாதகியாம் பகைக்காரி திட்டொருபால் பாவித்தாய்மார்
கருக்கொருபாலிவ்வூரார் தூற்றுகின்ற வேச்சொருபால் கணவன்செய்த
திருக்கொருபால் வளைந்தெனது சிந்தைதனைத்தடுமாறச்செய்தேபாவி
யுருக்குவதுபோதாமல் மழைவைமின்னே மதிகூட வுடன்பட்டானே. (௫௬)

ஏசமானிதனைக்காண விதுசமயமோ வன்றேவெறுதவேளை
நிசமானசொல்லணங்கே பார்த்திடலாமெனைக்குறித்து நின்பாலென்ன
பிசகானசங்கதியைப் பேசினுள் நீயொன்றும் பேசவின்றே
வசமாகுப்படியெனக்கு மழைவைமின்னேயாவையும்நீவகுத்திடாயே. (௫௭)

அழகின்றிப்பிறந்தாளா கொண்டவனு மப்படியே யாகினுனே
பழகியவனே இன்னுள்வாழ்ந்தாளா ஏதுமில்லைப்பாவம்வீணே
ஒழுகுதண்ணீராருக வுயிருடனேயொப்புவித்தாளுராருக்கு

மழலைமின்னே தவமிருந்துபெற்ற மகளிப் பயன்தான் வாய்ந்திட்டாளே. (ரு௮)

காரிகையாராயிரம்பே ரவர்க்கெல்லாம் நீதா னேகணவனென்றால்

ஆரிடத்திற்போகாம லிருந்திடலாமுடல்தனை யகற்றிச்சேர

ஏருலவுபகலிரவின் காலமெலாம் போதாதே யென்பால்வந்து

பாரறியுமழலைமன்னு கூடுதற்குநேரமெங்கே பகர்ந்திடாயே. (ரு௯)

இவ்வளவிலவனுறவை யொழித்துவிடுதலே மு றைக்கு மிதுவேபோதும்

மவ்வல்நகைமின்னரசே வாயிலொன்றுமனதி லொன்று மழலையானுக்

கெவ்வளவோ நான்படித்துமாற்றினிலேகரை த்த புளியென்னலாச்சு

செவ்வையுறு காலமினிக் கிடைக்குமெனச் சொப்பனத்துஞ்சிந்தியாதே. (௬௰)

காவியார்கண்ணியர்களன்புடனே யீய்ந்திடுக ற்கண்டுவச்ச

நாவியாதுமிலுமொரு சத்துருவா பெருகிவரு ம் நதியாகண்ணீற்

ஆவியார்குடிபோக நினைக்கின்றார் வேற்றுட லிலாருமற்ற

பாவியாயிருந்து விட்டேன் மழலையர்கோ ன்பேச்சைநம்பிப் பாரில்மானே. (௬௧)

நேற்றிராப்போதிலொரு நிமிஷம்வெகுகோடி யுகநேரமாகத்

தேற்றுவாரில்லாமல் மன்மதப்பாதக னுடலைத் தீக்கத்தென்றற்

காற்றுவாதனையைச் சொல்லிமுடியாது மழைவையின்னே கண்முன்னேநீ

தோற்றுவாய்பிடிக்குமப்போ தகப்படாயிதென்னதோஷந்தானே. (௬௨)

மண்ணேடந்தனைநம்பி யாற்றிலிறங் குதல்போல்மழைவையானை

யெண்ணெடிகள்நம்பிப்பயனற்றாள் மன்மதனெய்தவம்பாற்

புண்ணேட வதன்வழியே புருஷோடு யாவியென்று புழுங்கும்போதே

விண்ணேட வெழுந்துமதி நெருப்பிறைக்கவுடலம்வெந்து வீழ்ந்திட்டாளே. (௬௩)

திருவருளமழைவைநகர்க் கிறைவன்தன்பாற் சென்றயோ, அவனென்பாற்சேரவேண்டி, வருவேனென்றனையிட்டுக்கெட்டி வார்த்தைவகுத்தானே கள்ளியர்கள்மாயத்தாலே, யொருபேச்சும்வழுங்காமலிருந்திட்டானே வுள்ளன்பெல்லாமவேணுமுண்டோவங்கே, மருவுதற்குனான்சென்றற்குறையுண்டாமோ மடமயிலேயானறியவகுத்திடாயே. (௬௪)

எயிற்றாவம் விழுங்கிடலாகாதா மீனாமலிந்துதன்னைக்

குயிற்றிரளைக்கழுத்திலே சுருக்கிட்டுத்தொங்கவிட்டுக்கொல்லொண்ணாதா

துயிற்றுவர்போல் முள்ளணையைப் பூவணையென்றெனக்கிட்டார் தோழிமாரிவ்

வயிற்றெரிச்சலுனக்கிடுங்கா ணுண்மைசொன்
னேன் மழைவைநகர்வாசத்தோனே: (௬௫)

பாதரசேயவன்வரும்போ துன்றனக்குமுகம
லர்ச்சி வாங்கிற்றும்பின்
ஆதரவோடுபசாரஞ்செயவில்லையா மவனையடிப்
பதற்கொப்பாகத்
தாதியரையடித்தாயாமதற்கவர்கள் நகைத்தா
ராந் தண்ணீர்ச்செம்பை
மோதுறக்கீழ் திடீலென்று விட்டாயா மழை
வையர்கோன் மொழிந்திட்டானே. (௬௬)

கார்மேவுகுழலணங்கே சிறியவீடுகட்டி விளை
யாடுகின்ற காலத்தோர்நாள்
சீர்மேவுமழைவையர்கோ னென்பால்வந்துசி
தைப்பனெனவெருட்டிமணந் திரஞ்செய்தேக
ஊர்மேயும்பட்டியவ னுனைவாழொட்டா னொ
ருகாலுங் கூடாதென் றுரைத்தார் தாய்பார்
ஆர்பேச்சுங் கேளாமற் சத்தியத்துக்கஞ்சி ந
டந்திக் கோலமாயினேனே. (௬௭)

இணக்கமுற மழைவையர்கோ னண்டைவீட்
டிலிருந்திடநீ சொன்னபடியிசைந்து நான்போ
ய், வணக்கநெடுஞ்சாய்க்கிடையாய் விழுந்தேன்
பின்பு வாய்புதைத்துக் கால்பிடித்து வேண்டிக்
கொண்டேன், பிணக்குவந்து தீராததுண்டோ
சொந்தப்பெண்சாதி பாலென்கிறேன் பெண்ணே
யென்மேற், கணக்கறுபுன் குறைசொல்லி யுன்
பாங்கிதன்னைக் கடிதிலனுப்பெனப் பார்த்துக்
கருவினனே. (௬௮)

பாவையேமழைவையர்கோ னேற்றிராவிற் ப
டுக்கையறைக்குள்வந்து பாயல்மீதில்

ஆவலொடு படுத்திட்டான் கூடாமே மவன்
தானே முந்துகவென்றிருந்தேன் சும்மா
தேவையில்லையோபிணக்கோ வதற்குட்புத்திதி
ரும்பிற்ரே வயர்ந்துமெனைத்தீண்டிடாமல்
மேவியவப்பாதகியின் குணத்தை மேன்மேல்
விடியுமட்டும் வர்ணித்துமீண்டிட்டானே. (சுகூ)

கணவரொடுகொஞ்சுதலுஞ் சரசஞ்செய்து க
லத்தலும்பின்பிணங்குதலுங் கடிகையொன்றில்
அணவுதலுமிரண்டுடனு மொன்ருய்க்கட்டிய
ணைத்தலுமன்மத நூலையாய்ந்துபேசிக்
குணமொருமித்துள்வெறுப்புப்போலத்திட்டி
ங்கொள்ளுதலுமிதுவகையாய்க் குலவுகின்ருரா
மணமருவுகூந்தல் மின்ஞேதுமின்றி வயிறெ
ரியவாடுகின்றேன் மழைவைமின்னே. (எய)

அள்ளாதுகுறையாது சொல்லாதுபிறவாநிங்
காதலாநீ
துள்ளாததுள்ளலொடுபொய்யாணையிட்டுரை
க்குஞ் சூதையொப்புக்
கொள்ளாதுபாவிமனமழைவைநகரரசேயான்
கூறும்வார்த்தை
தள்ளாதுவீட்டிலே நின்றுவீடு சுகமுண்டாம்
சத்தியந்தானே (எக)

கசந்ததோஅங்கே யுன்கைப்பொருளும் போ
யிற்ரே காதலாக
வசந்தருதுதனி லுனதுதொழிலினுக்கு மற்
ருெருவன் வந்திட்டானே
அசந்துபோய்வந்ததற்குக் காரணமேனன்பா
கஅடைந்தாயில்லை
நிசந்தனைநீ வெளியிட்டாற் களங்கமறு மழை
வைநகர் நிருபரேறே. (எஉ)

வேலிபயிர் தனையழித்தால் எப்படித்தான் பெண்ணணங்கே விளையுட்பூமி
தாலிகட்டுநாயகனே சதிகாரனாகி விட்டாற் றரண்வேறுண்டோ
பாலியமும் வீணாகிப் பார்ப்பவர்கள் நகைப்பதற்கும் பாத்திரமானேன்,
நீலியென்பார் மழுவையுள்ளார் வெளியிட்டால் நிலைகலங்கி நிற்கின்றேனே. (௭௩)

கனவுதனில் மழுவையர்கோன் வந்திட்டா னெனையணைந்தான் களித்துப்பேசி
வினவினனென் சுகத்தை பின்னரசே யுனக்கென்னவேண்டுமென்றான்
நனவென்றே நானினைத்துத் தெய்வபலத்தாற் கிடைத்தானு தனென்னைப்
புனமயிலே பொங்கினேன் என்பாவிவிழித்துத் தனிப்பாய் செய்தேனே. (௭௪)

கோபமுள்ள விடந்தனிலே குடியிருக்கு மன்பென்றுகூறக்கேட்டுந்
தாபமென்னமேலுக்குக் காட்டுகின்று னவ்வையாற்சத்திதான்செய்யப்
பாவபுண்ணியங்களறியாதவனேவகத்திலுண்டு பற்றுன்மீதில்
தீபவொளிமழுவைமின்னே மனைவியெனுஞ் சுதந்தரமுஞ் சிந்தியானே. (௭௫)

அம்பாரும்விழியணங்கே சகிக்கக்கூடா வடஞ்செய்துநின்னை யருஞ்சிறையில்வைத்தான்.
செம்பாதிவயதெல்லாங் கழித்தானந்தச் சேயிழைபாற் பிணியோடுசேர்ந்தழப்பைச்
சம்பாதித்திடம்வந்தான் தாலிகட்டுஞ்சங்கடத்துக்காய்க்கொஞ்சந் தண்ணீர்வாரு
நம்பாதேமேற்சொன்ன மழுவையானை நண்ணாதேயவன்புணர்ச்சி நலத்தைமானே. (௭௬)

எனையகலா வாய்[illegible]றியிகழ்ந்தமொழி யூர்த்திரிலவன்
பொன்னாமிதயமுருகியதோ புத்தியிழந் திவ்வாறுகர்
சொன்னார்புவியி லொருவருண்டோ துர்ப்பாக்கியனா னென்னசெய்தேன்
பின்னால்வினையுமோ ராமற் பேசலாமோமழவைமின்னே. (௭௭)

(கட்டளைக்கலித்துறை.)

பாதகர்செய்கை நினைத்தாலுநெஞ்சம் பகீரெனுமே, ராதரவின்றித் தனியேயெனைவைத்தருமையற்ற, காதகிவீட்டுக்கடைவாசல் காத்துக்கருதுபய, னேதும்பெறாதுழல்கின்றார் மழவையிறைவரே. (௭௮)

பலநாள்கழிந்ததிளமையும் வீணிற்பறந்த தின்னுஞ், சிலநாளைவாழ்க்கையதுவுந்துணைவில்லைசேக்கையினிற், கலவாவிடினு மெனைக்கண்டொருசொற் களங்கமறச், சொலவாவதுசெய்மழவைப்பிரானைச் சுடர்த்தொடியே. (௭௯)

இந்தச்சென்மத்தி லுருப்படப்போகிற தில்லைமலர்க், கந்தக்குழலியர்க்கே கத்தமாயினர் காண்பதெந்நாள், அந்தப்படியிருந்தாலு மழவைக்கதிபனென்முன், எந்தப்பொருளு மவராகத்தோன்றுவ ரேந்திழையே. (௮௰)

மட்டுண்டகூந்தலின் மானார்வலையில் மயங்கி நிதம், தட்டுண்டவலைதற்கேசகசமென் தங்கையரால், திட்டுண்டிருப்பதெனக்கே சகசஞ்செகத்திலினிக், கெட்டுண்டுபோவதுநானே மழவைக்கிளிமொழியே. (௮௧)

காராருஞ்சோலை மழைவைப்பிரானெனைக் க
ண்டொடுத்துப், பாரானினிக்கொடுப்பாதகக்கா
மப்பாமதுஷ்ட, சோராவென்றுவி தொலைப்பா
புனக்குச்சுபாவமிது, தீராப்பழியவர்க் கெய்து
மென்றேயுள்ளந் தேம்பியதே." (அ௨)

உனக்குமவட்குமோர் சண்டை யுண்டாவன்
றியுன்னைநினைந், தினக்கும்பல்கேட்புற வேதே
னுப்பிநகை யிசைத்தனளோ, கனக்குமுலைச்சிக
ண் பேசாதிருந்திட்ட காரணமேன், எனக்குந
ஆயமிதுகாண் மழைவையிறையவனே. (அ௩)

கரும்பா மூலையணங்காற் றுதமையல்கொண்
டங்கமொரு, துரும்பாயினளன்னம் வேம்பாகி
நாயர்கள் தூற்றுஞ்சண்டை, பெரும்பாரத
மோ ராமாயணமிவள்பேருரைக்க, இரும்பா
னமுனக்கையா மழைவையிறையச்சுவனே. ( )

இளைக்குமுடம்பு துரும்பாயுனைநினைந் தென்
ணமிட்டுக், களைக்குமழைவைக் கரசேயென்றே
ங்கிக் கண்ணீர்வடிக்கு, முளைக்குமதியழற்கென்
செய்வதென்றுமுறையிடுங்கை, வளைக்குந்தடை
யிடமாட்டாமல் மாதுவருந்துறுமே. (அ௫)

பிஞ்சிற்பழுத்த்கொடும்பாவி மன்மதப்பேய்பி
டித்து, விஞ்சித்துயிரையினிக்கொஞ்சநேரத்தில்
வாங்கிவிடும், அஞ்சிப்பயனென்ன வென்பாவங்
கைக்கொண் டணுவளவும், நெஞ்சிற்றுயரற் றி
ருந்தான் மழைவைநிருபதியே. (அ௬)

மதனேனுவெனக்கிரையென்பான் தென்காலும
தியும்வந்து, நிதமோய்விலாம லெனக்குனக்கெ
னனுமென்றேரத்தெந்த, விதமோபிராணன் விடு
வதுநிச்சயமேலையுள்ளார், கதையோவிவள்செய்
கையென்பார் மழைவைக்கணங்குழையே. (அ௭)

முந்தாநாள்முதலின்றுளவாய் விழிமுத்துகளை
சிந்திமுணங்கொடுநெஞ்சம்
நொந்தாள்விழுந்துபுரண்டாள் யாவையுநோ
க்காள் தன்னுள்நொடிந்துவருந்தி.
வந்தானோவென தன்பனெனச் சொல்வருநா
தாள் மாமழைவைப்பதிமன்னே
சிந்தாகுலமுறு முன்பாவையினுழிசென்றே
யருள்வகைசெய்வாயே. (அஅ)

வள்ளமுறுபாலடிசிலொடு மதுரக்கனியுங்கல
ந்தூட்டி வளர்த்தகிளியுமவன்பெயரே வழங்குந்
தமுமோயாமற், கள்ளச்செயலான் றன்னையொ
ருகாலநதனிலு நினையாபற்கடியதடை யிட்டிரு
ந்துமனங கருதாப்பொழுதோர் கணமுமில்லை,
எள்ளினளவும் பயமின்றி யென்வாயெப்பேச்சு
ரைத்திடினு மெடுக்குமவனைப் புகழ்ச்சியுடனெ
ன்னபுகன்று மிருவிழிகள், மெள்ளநோக்கும் ப
டத்திலவன் வீணுமுருவை மழைவைநகர்மின்
னேயெனக்கே யுரியபொருள் மிகுந்தபகையாய்
விட்டனவே. (அகூ)

ஏனுசைகொண்டவனுக்குட்பட்டே னிளைமை
தனி லிந்தப்பாடு
நானுகத்தொலைப்பதற்கு விதியிருந்தால் விட்
டிடுமோ நலமெண்ணுமல்
தானுகவங்குசத்தைப் பாகனுர்க் கெடுத்தீயுந்
தந்திபோலக்
கானுநங்குழல்மழைவைமங்கையேயெண்ணு
முற்றுக்கலங்குவேனே. (கூய)

நாணாகொள்பாதகனுர் கைவிட்டார், அந்நாளி
ல் நடந்தசெயகைக்

காரைநான்சாட்சியாய்ச்சொல்லுவிப்பேனுங் கலைந்தானன்றியென்றன்
பேரையாவதுபின்பு நினைத்ததுண்டோ சத்தியமும் பிசகிப்போனான்
ஊரைவாய்மூடுதற்கும் வழியில்லேனவன்கொடுமை யுணருவீரோ. (௯௧)

எய்தவினை நோகாமலம்பு தனைநோவதுபோலெல்லாத்தீங்குஞ்
செய்தவனுமழவைநகராளிதன்மேலே தான்றுஞ் செப்பிடாமல்
பெய்தமலர்க்கணைமாரப்பெய்தனையுந்தாயினையும்பேசிவீணை
வெய்துறலாலென்னபயன்விடியா தென்பாவமெனமேற்கொண்டேனே. (௯௨)

காரமென்றுநினைக்காமற் சத்துருவாய்நினைக்கிறான் தடுத்துப்பேசும்
வாரமுண்டோவென்றனக்கு மருந்திட்டு வசமாக்குமாதரொன்மேற்
காரமதைமூட்டிவிட்டார்ஒருகாலுந்திரும்பாதுசடினசித்தம்
ஆரணிமழவையர்கோன் தாறுமாறிருந்திட்டாலது போதாதோ. (௯௩)

ஒருவகையா யிருந்திட்ட மழவைமின்பாற் சுபம்வினவவொன்றுங்கூறு
திருகணீர்முத்தரும்பத் தேம்பினள்துடைத்திட்டவென்கைநீக்கி
யுருகலொடுமுச்சியிற்கைவைத்திட்டாள்வின்னினைப்பார்த்தோவென்றாள்
அருகுறநீயாருனக்குநானுமொன்றலறினளயர்ந்தேன்மானே. (௯௪)

அணங்கரசேயழுவேண்டா மனைவியர்கள் கா
தலனையணைப்பார்வைவார்
பிணங்குவர்பின் சேர்ந்திடுவாருலகியற்கை நீ
யெனனபெரிதாய்ச்சொன்ன
திணங்குறவேயவன்றன்னைக் கூட்டுவிப்பேனி
னைதவிடத்தானென்னவேண்டும்
மணங்கமழுந்தார்மார்பன் மழைவைநகராளி
யிதோவந்திட்டானே. (௯௫)

அடுத்தமனைவந்திருந்து மதற்குள்ளே யொரு
தூதோவயலாரெங்கள்
சடுத்தமதை யறிந்தவுங்கே நகைத்திடவும்
வேண்டுமோ தமனைவிண்போற்
கொடுத்திடற்குத் திருவுளமோ மோதகவிட
மவரக் கூடாதோமேல்
தடுத்துவைத்தாலென்னபலன் மழுவையினை
விளைவில்வரச்சாற்றுவாயே. (௯௬)

தேனுறும் வண்டினைப்போலென்னைக் கூடிச்
சிலநாளாயெவ்விடத்தே சேர்ந்தாய்தலை
தாளுறுமிவ்வளவுமறுதிகூடாதாட்கூடப்பரு
சமுனைக்காயிற்றந்த
மானைக்கேபணிசெய்பேர் வித்தவாசல் மறு
படியும்பின்யிருத்தாய் மறந்தோயாவி
போனது மழைவைநகர்க் காசேயுன்னைப்புல்
லுவதற்கேன்மனது பொருந்துறுதே. (௯௭)

என்றுனைதனைமறக்க மனந்துணிந்து தொலை
தூரபேகிவாழும்
பொன்றுனைக் காராமுன் புணர்ச்சியினைப்பா
லாவிபோயிடாமல்
இந்நாள்மட்டிருந்துதானே [illegible]
கதியிப்ரிபேர்வைத்து

மின்னுளோ புதுத்தேட்டை யனுபவிப்பாள்
மழைவைநகர்மீதிற்றானே. (௯௯)

செங்கரும்பே தெவிட்டாத சீனியேபசும்பத
மாய்த்திரண்டபாகே
இங்குன்னைநினையாம லிருக்கின்றேனெனமன
தி லெண்ணவேண்டாம்
அங்கமதாலுன்னிடையுமேனியினல்வெண்ண
கையும் அழுங்கண்ணாலே
பங்கமறுமுன்னிதழுங் கைகாலுமாய்மனதிற்
பாவிப்பேனே. (௯௯)

வேந்தர்தொழு மழைவையர்கோ னினிவாரா
னென்றிருக்கும் வேளைதன்னில்
ஏந்திழையேவந்தெனது கைபிடித்தான்மெய்
மறந்தேனிசையப்பூசுஞ்
சாந்தழியக்கொங்கையிலும் அதரத்தும் வடு
விருக்கத்தாழ்ந்துகீழே
கூந்தல்விரித்திடப்பார்த்தேயொருசாமம்போ
னதன்பின் குறித்திட்டேனே. (௱)

ஆதிநாளென்னரசிக் கிருந்தவன்பினுயிரம்பங்
கதிகமாகிக்
கோதிலர்யாமணியிற் காந்தியெனவே யொரு
மைகொண்டாள்மற்ற
மாதரார்பாற்கொடியேன் செய்ததெல்லா ம
றந்திட்டாள் மழைவை தன்னில்
தீதிலாதனியேனு மவட்கேற்பநடக்கின்றேன்
சிறந்தமானே. (௱௧)

மழைவைச்சிங்காரசதகம்

முற்றும்.